வில்லை. அடிக்கடி வந்து வந்துதான் போய்க் கொண்டிருக்க வேண்டுமா, 22 நாட்கள் தங்க வேண்டுமென்றால் அங்கேயே முகாம் அடித்து விட்டு, டீ.ஏ.-யைக் குறைக்கலாம் அல்லவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தங்குவது, வந்து போவது அப்போதைக்கப்போதைய சௌகரியத்தை ஒட்டியது. காரில் சொந்தச் செலவில் பிரயாணம் செய்தால் அச்செலவு ஆகாது.

பொறியியல் கல்வி

* 281 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேச நெருக்கடியை சமாளிக்கும் வகையில் எஞ்சினீயரிங் கல்வித் துறையில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்தும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், B.E. துறையில் அதிகப்படுத்தவிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) ஆம்.

(இ) விவரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: எஞ்சினீயரிங் கல்லூரி மாணவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்துகிற நேரத்தில் ப்ரீப்ரொபெஷனல் வகுப்பில் ப்ராக்டிக்கல் ட்ரெயினிங் அதிகமில்லாதிருப்பதால் அடுத்த ஆண்டு திருச்சியில் அமைக்கப்படுகிற என்சினீயரிங் காலேஜ்ல் படிக்க ப்ரீ-ப்ரொபெஷனல் மாணவர்களை அதிகப் படுத்த அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதுவும் பரிசிலனையில் இருக்கிறது.

'தாலிடோமைடு மருந்து'

* 282 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) "தாலிடோமைடு" என்ற மருந்தை தடை செய்யக் கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) அப்படியானால், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: இந்த தாலிடோமைட் மருந்தை வியாதியஸ்தர்கள் உபயோகப்படுத்துவதின் மூலம் வியாதி குணமாகிறது என்று அரசாங்கம் கருதுகிறதா?

18th March 1963]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த மருந்து வருவதே கிடையாது. அதை 'பான்' செய்தாகிவிட்டது. குணப் படுத்துகிற சக்தியில்லை. தற்போது இது 'பான்' செய்யப்பட் டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: அங்கஹீனமாக்குகிறது என்ற காரணத்திற்காக பான் செய்யப்படுவதற்கு முன்னால் இந்த மருந்து எவ்வளவு விற்கப்பட்டிருக்கிறது? அதனால் எவ்வளவு குழந்தை களுக்கு அங்கஹினம் ஏற்பட்டிருக்கிறது, அல்லது எவ்வளவு குழந் தைகள் கால் கை குறைவாகப் பிறந்திருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இம்மருந்தைக் கொடுப் பதால் கர்ப்பத்திலேயே குழந்தைகள் அங்கஹீனப்படுகிறது என்று பேப்பரில் கண்டவுடன் அமெரிக்காவிலிருந்து இந்த ந்யூஸ் கிடைத்தது—அதுமுதல் இந்த மருந்து வரவில்லை. நம் நாட்டிற்கு வராத அளவிற்கு அதை 'பான்' செய்தாகிவிட்டது.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTION *RE* POLICE FIRING IN URAPPANUR NEAR TIRUMANGALAM.

MR. SPEAKER: Hon. Members Sri V. Krishnamoorthy and Sri K. A. Mathialagan have given notice of an adjournment motion regarding the shooting in the Village of Urappanur near Tirumangalam.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதுபற்றிய செய்தியை நேற்று இரவு பத்திரிகையில் முதலில் பார்த்தேன். இன்று காலை ஒரு தந்தியும் வந்திருந்தது. இதுபற்றிய விவரங்களைக் கோரி, கலெக்டர் ஒரு ரிப்போர்ட் அனுப்பவேண்டுமென்று கோரப்பட்டி ருக்கிறது. அந்த விவரங்கள் தெரிவதற்கு முன்பு இதில் விவாதம் நடத்துவது முறையல்ல. மேலும் இந்தச் செய்தி பத்திரிகைகளில் வந்திருப்பதிலிருந்து சட்டப்படி, முறைப்படி கலெக்டர் உடனடி யாக நடவடிக்கை எடுத்து, சுட்டதைப் பற்றி விசாரிக்க ஆர்.டி.ஓ. நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் வந்திருக்கிறது. 'என் கொயரி' ஆன பின்னர்தான் யார் மீது தவறு என்று தெரியும். இதில் ஏதாவது விவரங்கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்றால் கனம் அங்கத்தினர் அவசரக் கேள்வி ஒன்றைக் கேட்டால் சீக்கிரத் தில் ஒன்றிரண்டு நாட்களில் அங்கிருந்து தகவல் வந்தவுடன் அதற்கு விடை அளிக்கலாம் என்றும் சொல்லிக் கொள்கிறேன்.

MR. SPEAKER: What I sav is this. There will be no detailed information either with the hon. Members or with the Government. Therefore, we can take up the adjournment motion afterwards.

III.—CALLING ATTENTION TO DIFFICULTIES EXPERIENCED BY ELECTRIC\L WIREMEN.

SRI R. S. VEERAPPA CHETTIAR: Sir, I wish to call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, viz., the difficulties experienced by the electrical